இஸ்ரவேலின் துதிகளில் வாசம் செய்யும்
எங்கள் தேவன் நீர் பரிசுத்தரே -2

வாக்குகள் பல தந்து அழைத்து வந்தீர்
ஒரு தந்தை போல
எம்மை தூக்கி சுமந்தீர் நீர் மாத்ரமே -3
எங்கள் சொந்தமானீர் -உம்மை
ஆராதிப்போம் ஆர்பரிப்போம் உம் நாமத்தினால்
என்றும்ஜெயமெடுப்போம்-2

எதிர்காலம் இல்லாமல் ஏங்கி நின்றோம்
காலத்தை படைத்தவர் தேடி வந்தீர்-2
சிறையிருப்பை மாற்றித் தந்தீர்
சிறுமையின் ஜனம்
எம்மை உயர்த்தி வைத்தீர் -2

செங்கடலை கண்டு சோந்து போனோம்
யோர்தானின் நிலை கண்டு அஞ்சி நின்றோம்-2
பயப்படாதே, முன் செல்கிறேன்
என்றுரைத்து எம்மை நடத்தி வந்தீர் -2

எதிரியின் படை எம்மை சூழும் போது
ஓங்கிய புயம் கொண்டு யுத்தம் செய்தீர் -2
பாடச் செய்தீர், துதிக்கச் செய்தீர்
எரிகோவின் மதில்களை இடிக்கச் செய்தீர்-2